# ஆத்ம ஜோதி



ஆத்மஜோதி நிலயம், நாவலப்பிட்டி, இலங்கை.

ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே. - சுத்தானந்தர்

ஜோதி 20 | பிலவங்க ௵ பங்குனி ௴ 1 ௳ [16-3-68] | சுடர் 2

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஸ்ரீ ரமண அருள் நோக்க வகுப்பு | 121 |
| இன்பவழி | 122 |
| ஆத்மவிசாரம் | 123 |
| ஸ்ரீ ரமண வழி | 128 |
| தில்லேச்வரப் பதிகம் | 130 |
| அபரோக்ஷானுபூதி | 133 |
| நலம்தரும் ஞானக் கோவை | 136 |
| வேறு பேச்சு இல்லை! | 140 |
| எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே! | 149 |




## ஆத்மஜோதி சந்தா விபரம்


ஆயுள் சந்தா 100-00
வருடச் சந்தா 3-00
தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர் திரு. க. இராமச்சந்திரா
பதிப்பாசிரியர் திரு. நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி. போன்: 353



பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி

# ஸ்ரீ ரமண அருள் நோக்க வகுப்பு

அநித்தவுல குதித்துமல மிகுத்தவுட லெடுத்தவுயி
ரனைத்துமத னெதிர்ப்பகைமை யறத்தன்வய-மாக்கும்
அலைத்தமன முறுத்தகுணம் வெறித்தனமு மிகுத்தசுர
மனித்தவுரு படைத்தவரு மழுக்ககல-நோக்கும்
அறத்ததெது மறத்ததெது வெனத்தெரியு மதிச்சிறிது
மிலர்க்குமுயர் வறத்திலொரு பிடிப்படைய-வூக்கும்
அசுத்தமன மிழுத்தவழி திரித்துழலு பசுத்தனம
னிதர்க்கவரை நடத்துபதி யெனக்கவலை-போக்கும்
தனித்தனையை யெமற்குரிமை கொடுத்தழுது தவிக்குமொரு
சிசுக்குநிக ருளத்தடியர் தமக்கபய-மூட்டும்
தணிக்கரிய மிகப்பெரிய தனப்பிரிவு மகப்பிரிவு
தனிற்றுயர மிகுத்துவரு பவர்க்கமைதி-கூட்டும்
தனத்தருற வினத்தர்மனை விபுத்திரரு நகைக்குமிடி
தனைக்களைய நினைத்துவரு பவர்க்குதவி-காட்டும்
தரித்தவுட லிடர்ப்பிணிக டவிர்ப்பதொடு மநித்யவுடல்
விதிக்கமைய விடுத்தமைதி யுறற்குநினை-வூட்டும்
இனித்தகுண நலத்துடனு மிறைக்குவெகு பிறப்புவழி
படப்பழகி யவர்க்கிறைவ டிவத்திலரு-ளூட்டும்
இசைப்புலவர் மொழிப்புலவர் கலைப்புலவ ரகத்தினவ
நவப்புலமை மிகுத்தொளிர வெழிற்பிரபை-யூட்டும்
இகத்திலொரு சுகத்திலெனு மினிப்புறுவ தறப்பழக
விருப்பமுறு பவர்க்கரிய விசித்ரவழி-காட்டும்
இறப்பிலெழு பயத்தையுத வியப்பொழுது மரிப்பதெது
விருப்பதெது வெனத்தெளிய மிகுத்தவொளி-கூட்டும்
செனித்தமன முனைப்பகல செபப்பணியி லிணைத்தொருமை
செயச்செபவ டிவிற்றிகழு மகப்பொருள-தாக்கும்
செனித்தமன முதிக்குமிட மொடுக்கவொரு திருப்பமுடை
யவர்க்ககமு ளிழுத்தசல வியற்கைவடி-வாக்கும்
திரட்டியுள வபவக்குவமு மொருப்படிவ மெனத்தகுதி
திளைத்தவடி யனுக்குமொரு கடைக்கணுற-வாக்குந்
திறத்தருண மலைக்கெழுர மணத்திருவ தனத்திலிரு
ரவிக்குமுய ரொளிப்பரவு திருக்கணரு-ணோக்கே.

**ஸ்ரீரமணநகர்,**
**திருவண்ணாமலை.** **ஸ்ரீ சாது ஓம்**

ரமணப்ரகாசம்

# இன்பவழி

மகரிஷி சுத்தானந்த பாரதியார்

மனிதப் பிறப்பு வந்ததேன்? மனிதனுக்குள்ளுள்ள தீரனை, தேவனை, பிரஹ்மத்தை அறிந்து அவனுடைய சச்சிதானந்தமே தானுகவன்ருே! தான் என்பது பிரஹ்மமே. அதுவே நான் என்றறிந்து அது வானுலொழிய வேறு எத்தகைய உபாயத்தாலும் இன்பம் எய்த முடியாது. அதையறிந்து அதுவானுல், வேறிடம் சுற்ற வேண்டியதில்லை. வேற்றுமை பாராட்டித் திரிய வேண்டியதில்லை.

தன்னுள்ளே தானுகித் தத்துவமாய் நின்றிடுக
பின் வேண்டாம் பல்சமயப் பேச்சு.

இந்நிலை பெற்றே நம்நாட்டு மகரிஷிகள் யோகச் சுடராக நின்ற நிலையிலேயே மனித சமூகம் புனிதமுறும் சக்திக் கதிர்பரப்பி வந்தனர். ஒரு விளக்கு எப்படி இருந்தபடியே சுற்றும் சுடர்வீசிப் பலருக்குக் காட்சியும் இன்பமும் அளிக்கிறதோ அது போலவே, ஒரு பரிபூரணயோகி தனது இதயத்தில் நிலைத்தபடியே, எவ்வித முயற்சியும் இன்றி இயல்பாகத் தனது தவச்சுடரைச் சுற்றும் பரப்பிக் கணக்கற்ற ஜீவராசிகளைப் புனிதப்படுத்துகிருன். அவரவர் அன்பிற்கும், அறிவிற்கும், பக்குவத்திற்கும் ஏற்றபடி ஒரு பூரண சித்தனின் காந்த உறவால் உள்மலர்ந்து பேரின்பம் பிறக்கும். ஆதலின் ஒரு நாட்டிற்குச் சிறந்த செல்வம் மகரிஷியே என்பதில் ஐயமில்லை. பாரத சமுதாயத்தை ஆக்கி அணிவகுத்து வாழ வைத்தவர் யார்? வேதமுனிவர், வியாசர் போன்றதபசிகளன்ருே? அவர்கள் வழியைப் பின்பற்றியன்ருே நாடு உருவானது. ஆதலின் ஒரு தேசம் வாழ்வதற்கு அர்த்தசாஸ்திரம், சமூகசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கும் எத்தகைய சாதனத்தினும், ஒரு மகரிஷியின் சுடர் பெருகுந் தவக்காந்தமே முக்கிய சாதனமாகும்.

★★

# ஆத்ம விசாரம்

— ஆசிரியர் —

'ஆத்மவிசாரம்' என்ற சொற்றொடருக்கு ஆத்மாவை விசாரிப்பது என்றும், ஆத்மாவைப் பற்றிய விசாரணை என்றும் பொருள் கொள்வதுண்டு. தன்னை விசாரித்தறிதல் என்பதும் அதுவே. ஆனாலும் அதை எப்படிச் செய்வது? ஆத்மாவை யார் விசாரிப்பது? அல்லது ஆத்மாவைப்பற்றி யார் விசாரணை செய்வது? விசாரணையாவது என்ன? என்ற வினாக்கள் எழுகின்றன வல்லவா?

சாதாரணமாக ஆத்மவிசாரம், பிரஹ்மவிசாரம் என்ற பதங்களைக்கேட்கும்போது நம்முள் பலரும், தம்தேகத்தினுள் ஏதோ ஜோதிமயமாகவோ அல்லது வடிவற்ற ஏதோ ஓர் சத்தியமாகவோ ஒரு பொருள் இருப்பதாகவும், அது எது, எங்கே, எப்படியிருக்கிறது என்பதைத்தாம் அறியப் போவதாகவும் ஓர் கருத்தை மேற்கொள்கிறார்கள். இது சரியான கருத்தல்ல, ஏனெனில் அப்படி அறியப்போகும நமக்கு அறிபடுபொருளாக, திருசியமாக ஆன்மா இருப்பதில்லை! அறியமுற்படுவோன் எவனோ, அவன்றன் உண்மை வடிவாகவே ஆன்மா விளங்குவதால், ஆன்மவிசாரம் என்பது திருசியமாகிய ஓர் முன்னிலை அல்லது படர்க்கைப் பொருளை விசாரிப்பது போன்றதல்ல என்பதை ஆரம்பத்திலேயே உணர்த்துவதற்காகவே, பகவான்ரமணர் ''நான் யார்'' என்ற தன்மைவடிவில் ஆத்மவிசாரத்தை நாமகரணமிடுகின்றனர். 'நான்யார்'' என்ற கேள்வியில் 'நான் என்ற சொல்லுக்கு ஆன்மாவும், 'யார்' என்ற சொல்லுக்கு விசாரமும் பொருள்படுகின்றன.

ஆன்மாவை விசாரிப்பதுயார்? இந்த விசாரம் யாருக்கு? ஆன்மாவுக்கா? என்ருல், ஆன்மா யாதொரு விசாரத்திற்கும் அவசியமற்ற, நித்திய சித்த (என்றும் அடையப்பட்ட) நித்திய சுத்த, நித்திய முத்த, நித்திய புத்த நித்திய ஆனந்த பூரணமாகையால் இவ்விசாரணையை ஆன்மா செய்யாது; செய்யவேண்டியதில்லை என்று முடிவாகிறது. சரி அப்படியானுல் அகந்தைதான் இவ்விஷயத்தைச் செய்ய வேண்டியதாகிறது. இவ்வகந்தை ஆன்மாவை அறிய முடியுமா? முன் அத்தியாயங்களில் கூறியபடி இவ்வகந்தையோ? இருப்பற்ற ஓர் பொய்த் தோற்றம். இது தூக்கத்தில் லயித்து உருவிழக்கும் ஓர் அற்பவுணர்வு. அதனுல் இதன் அறிவிற்கு ஆன்மா அறிபடுபொருளாகுமா? ஆகையால் அகந்தையால் ஆன்மாவை அறியமுடியாது என்று ஆகிறது! ஆன்மாவுக்கோ விசாரம் அனுவசியம்! அகந்தைக்கோ ஆன்ம அறிவு அசாத்தியம்! என்ற முடிவு ஏற்பட்டால், பின்னர் இவ்வாத்மவிசாரம் என்ற சாதனையின் செய்முறை என்ன? ஆத்மவிசாரம் என்ற சொற்ருெடர் சாஸ்திரங்களில் காணக்கிடப்பதன் நோக்கமென்ன? இதுபற்றி ஆராய வேண்டாமா? பார்ப்போம்!

விசாரம் என்ற சொல்லை நமது சாஸ்திரங்கள் உபயோகிக்கும் முறைக்கும், பகவான் ரமணர் அச்சொல்லுக்குக் கொள்ளும் பொருளுக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. சாஸ்திரங்களில் இவ்வுடல் நானல்ல, பிராணன் – மனம் – புத்தி – அஞ்ஞானவிருள் நானல்ல, நானல்ல, என்று தள்ளும்படி கூறப்படுகின்றது. தள்ளுகிறவன் யார்? தள்ளுவதெப்படி? இம்மனமே (அல்லது புத்தியே) தள்ளுகிறவனுயிருந்தால், தன்னுல் அறியப்படும் பொருளாகிய (திருசியமாகிய) ஜடமயதேகம், பிராணன் இவை யிரண்டை மட்டுமே ஒரு வேளை தள்ள முடியும். அதற்குமேல் தன் வடிவான மனத்தை (புத்தியை) மனமே எப்படித்தள்ளுவது? ஆகையால், 'தேகம் நானல்ல, பிரணன் நானல்ல' என்று விசாரகாலத்தில் அவர்களைப்பற்றி நினைவால் சொல்லிக் கொண்டிருக்குமே தவிர, உண்மையான 'நான்' ஆக மிஞ்சுதற்கு அது வேறு எதைச் செய்யும்? அதனுல் 'விசாரம்'

என்றஇச்சொல்லின் செய்முறை ஒன்றைமற்றொன்றுவிசாரிப்பது போன்ற காரியமல்ல என்று தெரிகிறது. இக்காரணத்தால்தான் பகவானது 'நான்யார்' விசாரமானது தற்கவனம், தன் நாட்டம் என்ற கருத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

மனத்தின் இயல்பு என்னவென்றால், தன்னைத்தவிர மற்றொன்றை எப்போதும் நாடிக்கொண்டிருப்பதே. அதாவது முன்னிலைப் படர்க்கைகளை அறிந்து கொண்டிருப்தே. மனம் இவ்விதம் எதை நாடுகிறதோ, அதைப் பற்றிக் கொண்டிருக்கிறது என்பதே அர்த்தம். நாட்டமே பற்று! தேகம், பிராணுதிகளை, ''இது நானல்ல, இது நானல்ல'' என்று தீர்மானிக்கும் வடிவிலாது அவைகளையே சிந்திப்பதால், இது அவைகளைப் பற்றிக் கொள்ளும் முறையே தவிர, விளக்கித் தள்ளும் முறையாகாது! இதுவே உண்மையான விசாரி எவனுக்கும் சாதனையில் அனுபவமாகும் விஷயம். பின், இதிலுள்ள இரகசியம் யாதெனின்-

நாம் அறிந்தாலும் அறியாவிட்டாலும், இன்னும் அறியவில்லையென்று நம்மால் தப்பு அபிப்பிராயங்கொள்ளப்பட்டிருக்கும் ஆன்ம சொரூபமே நம் உண்மையாகிறபடியால் நமது (பரமாத்மாவினது) சுபாவதிருஷ்டியே அனுக்கிரகந்தான். அதாவது, நமது நாட்டம், கவனம், திருஷ்டி எதைச்சாருகிறதோ அது அனுக்கிரகிக்கப்பட்டு புஷ்டியடைந்து செழிக்கும். தற்போது ஒருவன் தன்னை ஜீவன் என்று கருதிக் கொண்டிருந்தாலுங்கூட, அவனது கவன (நாட்டத்தின்)சக்தியானது ஆன்மசித்ரூப நாட்டத்தின் பிரதிபிம்பமே யாகையால், அது எதன்மேற் படுகிறதோ அல்லது அது எதை நாடுகிறதோ அது வலிவுற்று (அனுக்கிரகிக்கப்பெற்று) ஓங்குகிறது. ஆகையால் மனத்தின் கவன சக்தியை முன்னிலைபடர்க்கைகளின் மேல் செலுத்தச் செலுத்த, செலுத்தும் கிரியாபலமும், அப்பொருள்களைப் பற்றிய நினைவு வடிவமான ஐம்புல அறிவாகிய அறியாமையும், பெருகுதே தவிர ஒடுங்காது! நம் எண்ணங்கள் எனப்

படுவனயாவும் முன்னிலைப் படர்க்கைகளே என்று முன்பு கூறினோமல்லவா? அதன்படி உலகவடிவேயாகிய எண்ணங்களை — மனத்தை (முன்னிலைப் படர்க்கைகளைக்) கவனிக்கக் கவனிக்க அது விருத்தியாகிக் கொழுக்கும் இது இடையூறே. நமது (ஆன்மாவினது) அனுக்கிரக திருஷ்டி (நாட்டம்) படப் பட அம்மனத்தின் அலைவும் ஆதிக்கமும் பெருகிக் கொண்டேதான் போகும். இதனால்தான் மனத்தால் எதையும் நானல்லவென்று நினைத்துத் தள்ளிவிட முடிவதில்லை. (காமக் குரோதாதிகளாகிய எண்ணங்களை ஒழிக்க அவைகளையே எதிர்த்து நினைத்துப் போராடும் 'சாதக'ர்கள் அவைகளை அனுயாசமாய்க் கடந்து செல்வதற்கும் இது தான்காரணம்.) அதற்குப்பதிலாக (பரமான்மாவாகிய) நமது நாட்டம், நம்மேலேயே (தன்மையின்மேல்) திருப்பப்பட்டால், நம் இருப்பு உணர்வு ஆகிய சத் - சித்தே ஓங்குகிறது. மனம் கவனிக்கப்படாததால் நம் அனுக்கிரக பலத்தை யிழக்கிறது. 'இரும்பும் குறும்பும் இருக்கக்கெடும்' என்றபடி, குறும்பெழுச்சிவடிவான வாசனை வித்துக்கள்யாவும், கவனிப்போரின்றிச் சும்மா விருக்கவைக்கப் படுவதால், நீரற்ற விதைபோல், எண்ணங்களாகிய செடிகளாகப் பரிணமிக்க வியலாமல் அசக்தமுறுகின்றன. பிறகு தன்னறிவாகிய ஞானத்தீ மூழும்போது, அவை அதற்கு உலர்ந்த விறகாகி விடுகின்றன. வாசனைகள் யாவையும் நசிப்பிக்க முடிவதும் இதனால்தான்.

'கிழக்கை விலக்கு, என்றால், 'மேற்கே நாடிச்செல்' என்பதே அதன் செய்முறை! அவ்வாறே 'தானல்லாத பஞ்சகோசங்களை விலக்கு' என்றால், 'நான்' என்பது எது? அல்லது நான் யார்?' என்ற வடிவில் நாட்டம் தன்மீது பற்றப்படுவதே நாமல்லாத அவற்றைத் தள்ளும் முறையாகும். 'இது நானல்ல, நானல்ல' வென்று நினைக்கும் மறுப்பு முறை (Negative Method) 'குரங்கை நினைக்காமல் மருந்தைக்குடி' என்ற நியாயம் போல் ஆகிவிட்டதை யுணர்ந்தே, பகவான் பழைமை முறையைச் சீர்திருத்தி, 'யானையை நினைத்துக் கொண்டு மருந்தைக்குடி' என்றால் குரங்

கை நினைக்காமல் இருக்கத் தக்க உளவு ஆகிவிடுவதுபோல (Positive Method) ஏற்ற முறையை அருள்கின்றார்.

........................................................................................அகந்தையே
யாவுமாம் ஆதலால் யா(து) இது? என்று நாட்டலே
ஓவுதல் யாவுமென ஓர்.

(உள்ளது நாற்பது)

''(பஞ்ச கோசங்களும் - அவற்றின் விரிவாகிய உலகாதிகள்) யாவும் அகந்தையேயாகும். அவைகளை ஓவுதல் விடுதல் – துறத்தல் - தள்ளுதல் - என்பது என்னவெனில், 'இது யாது? இந்த நான் யார்?' என்று தன்னை நாடுவது தான்.'' தன்மை நாட்ட முறுவது ஒன்றேதான் பஞ்ச கோசங்களையும் விலக்குவதாகும் என்று அவைகளைத் தள்ளக் கூடிய செய்முறையைத் திட்டவட்டமாக பகவான் இவ்வாறு கூறிவிடுகிறார்.

(ஸ்ரீ சாது ஓம் அவர்கள் இயற்றிய ''ஸ்ரீ மரண வழி'' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. அந்த நூலின் விமர்சனத்தை அடுத்த பக்கத்தில் காண்க.)

★★
★


# சமரச ஞானக் கோவை

ஆசிரியர்: உயர்திரு. க. இராமச்சந்திரன் அவர்கள்

பல பெரியார்களின் பாராட்டுகளைப் பெற்ற நூல்.
தமிழ் அறிந்த ஒவ்வொருவர் இல்லங்களிலும்
இருக்க வேண்டிய நூல்.

விலை ரூபா: 5-00

கிடைக்குமிடம்:

ஆத்மஜோதி நிலையம் – நாவலப்பிட்டி.

# ஸ்ரீ ரமண வழி

(முதற் பாகம்)

(''நான் யார்?'' விளக்கம்)

இயற்றியவர்: ஸ்ரீ சாது ஓம், திருவண்ணாமலை.

பிரசுரகர்த்தா: டாக்டர். R. சந்தானம்,
ஸ்ரீ ராமா ஆஸ்பத்திரி, வந்தவாசி,
(வடஆர்க்காடு) தென்னிந்தியா.

விலை ரூபா: 2-50.

அத்துவித சித்தாந்தம் வலியுறுத்தும் முக்தி ஒன்பது. ''செத்தபின் சிவலோகம், வைகுண்டம் சேர்வதல்ல''; இப்போதே, இங்கேயே, நமது இயல்பான ஆனந்தபரிபூரண இருப்புணர்வில் திளைத்தலேயாம். அதை அடைவதற்குரிய விசாரமார்க்கத்தை பகவான் ஸ்ரீரமண மகரிஷி அவர்கள் ''நான் யார்?'' என்ற அரிய சிறிய நேர் உபதேசத்தில் அருளியுள்ளார். அதற்கு ஓர் அற்புதமான விரிவுரையே ''ஸ்ரீரமண வழி'' எனும் இந்த நூல் ஒன்று சுருக்கமாய்க் கூறிவிடலாம். ஆங்கிலத்தில் சொல்லின், A Key to ''who am I?'' of Sri Ramana Maharshi என்று அழைக்கலாம்.

ஒரு நூல் வரைய வேண்டுமென்ற ஆசையால் உந்தப் பட்டு, அதுகாரணமாகப் போடப்பட்ட திட்டத்தின்படி வெளிவந்ததல்ல இந்தநூல். ஏறக்குறையப் பத்து ஆண்டு களாக, அன்பர்கள் பலர் தமது சந்தேகங்கள் தீர்ப்பதற் காகக் கேட்ட கேள்விகட்கு ஸ்ரீ சாது ஓம் அவர்கள் அளித்த விடைகளை அடிப்படையாகக் கொண்டு தோன்றி யதே இது. நூலின் நடுவே, ''என்று நம்மவருட் சிலர் கேட்கலாம்'' ''என்று சிலர் கேட்பதுண்டு'' என்ற சொற் றொடர்கள் அடிக்கடி வருவதிலிருந்து, சாதகர்களின் புத்தி

யில் இனி எழப்போகும் சந்தேகங்கட்கும் சமாதானம் தரப் பட்டுள்ளனவெனலாம்.

தீவிரமான மோட்சயாஞ்சை ஈஸ்வர சொரூபமான சற் குருவினிடம் அசைவற்றபக்தி, அவர் திருப்பாதத்து பூரண சரணுகதி, ஆகிய மூன்று பேரின்பநிலையை நிச்சயமாக அளிக் கும் என்பதற்கு ஓர் இணையற்ற எடுத்துக்காட்டாக இன்று விளங்குகிறுர் ஸ்ரீ சாது ஓம் அவர்கள். பழைய ரமண பக்தர்களை யெல்லாம் தமது மூத்த சகோதரர்களென்றும், தாம் பகவானது ''கடைக்குட்டிப் பிள்ளை'' யென்றும், அடக்கமான உணர்வுடையவர் இவர்,

''பிறர்நலனைத் தந்நலனிற் பேணிமகிழ் மேலோர்க்
கிறையுலகுந் துச்சமென் றெல்லா - மறைகளுஞ் சேர்ந்
தோதுமோ ருண்மை யுறுதியே யென்பதற்குச்
சாது ஓம் வாழ்வே நற் சான்று''

என்று பழுத்தரமண பக்தரான ஸ்ரீ நடனுனந்த சுவாமி களின் பாராட்டைப்பெறும் பாக்கியத்தையும் தேடியுள்ளார்.

பதிப்பாளரான டக்றர். சந்தானம் அவர்களின் முன் னுரை, அன்னுர் ஸ்ரீரமணமூர்த்தியின் உபதேசங்களில் கொண்டுள்ள பூரணநம்பிக்கையையும், நூலாசிரியரிடம் வைத்துள்ள பக்தியையும் நன்கு வெளிப்படுத்துகின்றது. அவரது அருந்தொண்டும் பாராட்டுதற் குரியது. 'பகவா னின் திருவருள் முன்னின்று மேலும் மேலும் இதுபோன்ற நூல்களைப் பிரசுரிக்குமாறு பிரார்த்திக்கின்றேம். இந்த மல ரில், ''ஆத்ம விசாரம்'' என்ற தலைப்பின் கீழ்வரும் கட் டுரை குறித்த நூலின் ஏழாம் அத்தியாயத்திலிருந்து எடுக் கப்பட்டதாகும்.

★★

# தில்லேச்வரப் பதிகம்

( தில்லைநாயகி அம்மையார் )

விடயே றுகந்த விறல்மிக்க வீரன்
வினைமாழ ஆளும் இறைவன்
வடபாலிருந்து நால்வர்க்கு ஞானம்
வழியோ டுரைத்த மகிபன்
இடமாக வம்மை சிவகாம வல்லி
இனிதா யமர்ந்து மகிழு
நடமாடு தில்லேச் வரமாகு மீது
நாமும் வணங்கு பதியே.

★

விண்ணேறு தேவர் விடங்கண்டு சாய
வேண்டிநின் றுண்ட முதல்வன்
வெண்ணீறு பூண்ட வியன்மேனி பாகம்
விமலைக் களித்த பரமன்
கண்ணொன்று கொண்டு பூசித்த மாற்கு
கதிராழி யீந்த சதுரன்
பண்பாட வைகும் தில்லேச் வரமென்னும்
பழனம் நிறைந்த பதியே.

★

வரையான் மகளும் வளர்கங்கை யோடு
வாழ்த்தசீர் கண்ட வரதன்
திரைகொண்ட ஓதம் செறிநஞ்சை யுண்டு
திகழ்கண்ட னான சிவனார்
கரையண்டு நத்தம் திரையெற்றி முத்தம்
கருவுற்று வீனு மீங்கு
இரையென்று வந்த அணிநாகந் தில்லை
யீச்வர மீது பதியே.

ஆரேறு கங்கை அணியுந் துலங்க
அரவாடி யான பரமன்
காரேறு கண்டன் கரத்தில் பிடித்த
கலைமான் புறத்திங்கு மேவ
ஏரேறி யெங்கு இமவான் மகளோ
டினிதாக வாழு மிறைவன்
தேரேறி வைகுந் தில்லேஸ் வரமென்னும்
திருவாழும் நல்ல பதியே.

★

மூவர்க்கும் மூத்த முதலான தெய்வம்
முன்னுட் பவங்களை நீக்கி
ஏவர்க்கு மெட்டாத இன்பங் கொணர்ந்து
எமையாள வந்த இறைவன்
பாவங்கொள் தக்கன் பணியாத வேள்வி
பலமும் குறைந்து ஒழிய
காவல் நிறைந்த தில்லேஸ் வர மென்னும்
கழனிபுடை சூழ்ந்த பதியே.

★

விரைகொண்ட கொன்றை மலர்கொண்டு நித்தம்
விரும்பித் துதிக்கு மடியார்
கரையின்றி நின்ற கருமங்கள் மாளக்
கடைத்தேற்ற நின்ற பெருமான்
தரைநீன்று மேலோர் தவஞ்செய்து வாழத்
தமியேனுஞ் செய்வ தறியேன்
பரையோடு தில்லேச் வரமீது பூவில்
பக்தர்கள் சூழும் பதியே.

★

அனலாடு கையன் அடியார்கள் போற்ற
அம்பலத் தாடு முரவோன்
புனலாடு கங்கை சடைமீது கொண்டு
பூணரர மாக நாகம்
இனமேசெ றிந்த இதமான நாடு
இதுவென்ப ரான்ற பெரியோர்
தினமேந டிக்கும் தில்லேச் வரத்துச்
சிவனுருறை சீரின் பதியே.

ஏடணை மூன்று மெங்களுக் கில்லென்று
மியல்பினர் வாழ்ந்திடு கூடம்
தோடவிழ் குண்டல நாதனுறைந் தருள்
தும்புரு நாரதர் பாட
காடதில் மேய்ந்திடு மேறதில் வந்திடு
காதல் உமையவள் கூட
நாடொறு மன்பர் பண்ணொடு பாடும்
நற்றில்லேச் வரமெனும் பதியே.

★

அனமெனு நடையாள் அம்பிகை பாகன்
ஆண்டவ னெமக்கென்று போற்றி
வினையகல் வித்திடு விமலன் நமக்கென
வித்தக ரித்தின மேத்த
தனையருள் நெஞ்சில் உறைந்திடு வானை
தக்க தென் றன்பொடு காண
புனலுள தில்லேச் வரமிது காணீர்
புகழுரைகொண்டு பூசிக்கநல்ல பதியே.

★

ஆதார மாறினுக் கப்பாலே ஐயன்
ஆட்டம் புரிகின்ற னென்று
வேதாக மங்கள் வியப்புறுகின்ற
வித்தக னுறைகின்ற இடமே
சாதனை செய்வோர் பூசனை புரிவோர்
தண்ணளி யுள்ளவர் வாழ
போதனை தந்தடு தில்லேச் வரமிது
புண்ணிய மானஷப் பதியே.

# சங்கராச் சாரிய சுவாமிகள்

—அருளிச் செய்த—

# அபரோக்ஷானுபூதி

(தன்னை அறிதல்)

41. மேலே ஆத்மாவுக்கும் சரீரத்திற்கும் உள்ளவேறுபாடு கள் நியாயரீதியாக விரிவாக வரையறுத்துக் கூறப்பட் டுள. எனினும் மனிதவாழ்வின் புருஷார்த்தங்களை வளர்ப்பதில் இதனாலான பயனென்ன?

42. இதுவரை உடல் உயிராகா தென்பது ஏதுக்களாலும் எடுத்துக்காட்டுக்களாலும் விளக்கப்பட்டது. இனி எவ் வாறு கடலின்றி அலைகளிலவோ அதுபோல் ஆத்மா வின்றி உடலெனவேறாக வொரு பொருளில்லை என்பது நிரூபிக்கப்படும்.

43. அறிவில் வேறுபாடுகள் கூறுவது பொருந்தாது. அறிவு என்றும் ஒன்றே. கயிற்றைக்கண்டு பாம்பு எனமாறி மதிப்பது போன்றே சீவனைத்தாலும் பிரமத்தினின்றும் வேறுபடுத்திப் பார்த்தலாகும்.

44. அறியாமையினால் கயிறு எவ்வாறு கணப்பொழுதிற்குப் பாம்பு போலாகுமோ அவ்வாறே சுத்த அறிவே உண் மையில் மாறாது இப்பிரபஞ்சமாகத் தோற்றுகின்றது.

45. பிரமத்தையன்றி இப்பிரபஞ்சம் தோன்றுதற்கு வேறு

மூலகாரணமில்லை. ஆகவே இவ்வண்ட சராசரமெல்லாம் பிரமமேயன்றி வேறன்று.

46. இது எல்லாம் பிரமமே எனச் சுருதிகள் கூறுகின்றன. ஆகவே வியாபகமும் வியாப்பியமும் தோற்ற மாத்திரையாகும். இவ்வுண்மை உணர்ந்தார்க்குக் காரணம் காரியம் ஆகிய இரண்டும் வேருகத் தோன்றுமா?.

47. ''பிரமம் ஒன்றே'' என்பது சுருதி. காரணத்தின் அத்வைதம் காணப்பட்டது. அவ்வாருயின் பிரபஞ்சம் எவ்வாறு அதனினும் வேருகும்.

48. பிரமத்தில் வேறுபாடு காண்பவன் மரணத்திலிருந்து மரணத்திற்கே செல்கிருன் என்று பிரமத்தின் துவைத காரணத்தைச் சுருதிகள் கண்டித்திருக்கின்றன.

49. பரமாத்மாவிலிருந்து (பிரமத்திலிருந்து) யாவும் பிறந்ததால் எல்லாம் பிரமமே யாகும் என்றறிக.

50. நாமரூபாதிகளுக்கும் செயல்களுக்கும் அடிப்படையிலுள்ளது பிரமமே என்று சுருதி கூறுநிற்கும்.

51. பொன்னுலாகிய ஒரு பொருளின் அடிப்படை பொன்னுவது போன்று பிரமத்திலிருந்து தோன்றியயாவும் பிரமத்தினியல் புடையன.

52. பரமான்மாவுக்கும் சீவான்மாவுக்கும் கடுகளவேனும் வேற்றுமை காணும் அஞ்ஞானிக்குப் பயம் முற்ருக நீங்காது.

53. அஞ்ஞானத்தால் பேதம் தோன்றும்போது ஒருவன் தனக்கு அன்னியமாக வேறொன்றை, காண்கிறான். சீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றெனக் கண்ட ஞானி தனக்கு அன்னியமாக வேறொன்றையும் காண்பதில்லை.

54. பார்ப்பதெல்லாம் பரமாகக் காண்பவனிடத்தில் தனக்கு அன்னிய மின்மையில் மோகம் சோகம் ஆதியன எழுவதில்லை.

55. பிருகதாருண்யத்தில் உயிர்களுக்கெல்லாம் உயிராகும் பரமான்மா உண்மையில் பிரமமேயென்று கூறப்பட்டுள்ளது.

(தொடரும்)

★★


## காரைநகர்ச் சைவ மகா சபை

# பொன் விழா மலர்

சைவ சபை ஒன்று ஐம்பது ஆண்டுகள் உயிரோடு வாழ்ந்து பொன் விழாக் கொண்டாடியது என்றால் அது சைவத்தின் வெற்றி என்றே கூறவேண்டும். உள்ளமும் உயிரும் மகிழும் வகையில் மலர் ஒன்று வெளிவந்தது என்றால் அது சைத்திற்கு இரட்டிப்பு வெற்றியாகும். இம்மலருக்கு ஆசிச்செய்திகள் பதின்மரும் அணிந்துரைகள் மூவரும் வழங்கி உள்ளார்கள். காரணம்:— பாரத நாட்டிலும் ஈழத்திலும் பொறுக்கியெடுத்த ஐம்பதுக்கதிகமான அறிஞர்கள் கட்டுரை வழங்கி உள்ளார்கள். இத்தகைய சிறப்பான மலரை நடராஜப் பெருமான் அலங்கரிக்கின்றார். விலை 5 ரூபா மாத்திரமே. கட்டுரை ஒன்றுக்கு 10 சதம் கொடுக்க வேண்டாமா?

மலர் தேவையானோர்:

க. வைத்தீஸ்வரக்குருக்கள், சைவமகாசபை, காரைநகர். (சிலோன்) என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்க.

# நலம்தரும் கோவை
# ஞானக்

(வித்துவான்: உமாதாணுப்பிள்ளை)

ஞாலம் உய்ய வந் துதித்த
ஞானியர் பொற்ருள் நனிபோற்றி
தாலம் போற்றும் பொன்னூலாம்
சமரச ஞானக் கோவையினை
சீலன் ராமச் சந்திரனுர்
தெரிந்த புலமை யத்தனையும்
கோல மெழவே நாவே நீ.
குவலய மறுயப் பாடுவையே

★★

எண்ணும் சமய சட்சரியும்
ஈடில் ஆத்ம ஜோதியும்
அண்ணல் ராமச் சந்திரனுர்
அளத்தற் கரிய புலமையால்
மண்ணோர் மெச்ச ஆய்ந்துதவும்
மன்னும் பணிக ளத்தனையும்
தண்ணுர் கொன்றை மதிசூடும்
தாணு வருளால் வாழியவே.

★★

மெய்யாம் சைவ நெறியோங்க
விரிந்து கமழ்ந்து தமிழ்வளர
உய்யும் நெறிக ளத்தனையும்
உணர்த்ங்கின்ற தேகத்திரங்கள்

வைய மறிய வாஞளில்
வகை வகை யாக நன்காய்ந்த
ஐயன் ராமச் சந்திரனர்
அழகாய் ஓதி உணர்த்துவனே

★★

எல்லை யில்லா தென்மொழியும்
ஈடு மில்லா வட மொழியும்
சொல்லும் பொருளைப் பொதுமையாய்ச்
சொக்கச் சொல்லும் சொல்லழகன்
வெல்லும் உலக ஞானியர்கள்
விளம்பு கின்ற கருத்துக்களில்
நல்ல ஒருமைப் பாட்டையே
நன்கு தெரிவன் சந்திரனே.

★★

அன்பால் தூய்மை தனைப்பேணி
ஆண்டவ னருளை வேண்டிடுவான்
இன்ப வுரையா லிவ்வுலகை
எந்த நாளும் ஆண்டிடுவான்
என்பு மீயும் எம் வள்ளல்
இராமச் சந்திர உயர் செம்மல்
மன்னு முலகில் புகழுடனே
மகிழ என்றும் வாழியவே.

★★

மந்திரம் கீதை சித்தியார்
முப்பால் தேவி யந்தாதி
விந்தை லகரி நாற்கடலில்
மூழ்கி யெடுத்த நன்முத்தால்
சுந்தரன் ராமச் சந்திரனர்
தொகுத்த நித்திலக் கோவையினை
எந்த நாளும் உலகிற்கு
எடுத்துக் கூறிப் புகழ்வோமே.

★★

விந்தை யான வேதாந்தம்
விருப்பை யூட்டும் சித்தாந்தம்
சிந்தை யிருத்தி நனிதெரிந்து
செப்பத் தக்க ஒப்புமையை
முந்த முந்த எடுத்தோதும்
மூவா அறிஞன் சந்திரனுர்
செந்தில் முருகன் திருவருளால்
சிறக்க என்றும் வாழியவே.

★★

விந்தை யாகத் தெரிகின்ற
விஞ்ஞா னியர் கருத்துக்களை
சிந்தை நிறைந்த வரலாற்றைத்
தேசந் தெரிந்த உண்மையினை
இந்த உலகம் நன்கறிய
எடுத்துக் கூறி எந்நாளும்
புந்திக் கினிக்கச் செய்திடுவன்
புலவன் ராமச் சந்திரனே

★★

சங்கரர் ரமணர் வள்ளலார்
தாயு மானுர் வாசகனுர்
எங்கு மேத்தும் பரமகம்சர்
ஈடில் அரவிந் தரானந்தன்
மங்கலக் குரலைச் சந்திரனுர்
மதுர வாக்கால் கோவையிலே
தங்கம் போலக் கேட்டிடலாம்
சகத்திலமைதி கண்டிடலாம்

★★

கண்ணன் லீலை கண்டிடலாம்
கந்தன ருளைப் பெற்றிடலாம்
நண்ணும் வரங்கள் தந்தருளும்
நம்ப னுடல் தெரிந்திடலாம்

மண்ணை யாளும் அம்பிகையின்
மலரடி ஏந்தித் தொழுதிடலாம்
அண்ணல் ராமச் சந்திரனுர்
அற்புத ஞானக் கோவையிலே

★★

சித்தம் நிறைந்த சந்திரனுர்
திருவுள் ளத்தின் கருத்தெல்லாம்
பத்தித் தேனுய்ப் பாய்ந்தோடும்
பாவாய் மலர்ந்து பரிமளிக்கும்
தத்துவ மெல்லாங் கமழ்கின்ற
சமரச ஞானக் கோவையிது
நித்தம் நிலவும் பொக்கிஷமாய்
நீணில மீதினில் வாழியவே

★★

சாத்திரம் தெரிந்த சீருடையான்
சமயப் பணிகள் தினம் செய்வோன்
தோத்திர மீது எந்நாளும்
தோய்ந்து நிற்கும் உளமுடையான்
ஆத்திரத் துடனே பாரதத்தின்
அந்நாள் தத்துவ உலகத்தை
சூத்திரத்தாலே உலகிற்குச்
சொல்வன் ராமச் சந்திரனே

★★

அன்பால் வளர்ந்த ஆழணகன்
அறிவா லுயர்ந்த பேரறிஞன்
என்பு மீயும் சீருடையான்
என்றும் போற்றும் பேரருளான்
மன்புவி யெங்கும் அருள்மணமே
மன்னும் மணமாய் கமழ்ந்தோங்க
இன்ப வுணர்வால் பணிபுரியும்
இராமச் சந்திரன் வாழியவே.

★★



# வேறு பேச்சு இல்லை!

—கி. வா. ஜகந்நாதன்—

வாய்உடைய மக்கள் தமக்குவேண்டிய பொருள்களைப் பிறரிடம் கேட்பதற்கும், தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கும் வாயை உபயோகப்படுத்துகிறார்கள். அவசியமான சமயத்தில் பேசுகின்றது என்பது இல்லாமல் பயன் இல்லாத பலவகைப் பேச்சுக்களையும் பேசுகிறார்கள். விலங்குகளுக்குக் கிடைக்காத ஒரு பேறு மனிதனுக்குக் கிடைத்திருக்கிறது விலங்குகளை வாய் இல்லாப் பிராணிகள் என்று சொல்கிறோம். பேசும் ஆற்றலைப் பெற்ற மனிதனே வாய் உள்ள பிராணி. தன் பேச்சை நல்லவகையில் பயன்படுத்திக் கொள்ளத் தெரிந்தவன் சிறந்த மனிதனாவான். பயனில்லாத பேச்சைப் பேசுகின்றவனை மக்களுட் பதர் என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்

எதைப்பற்றிப் பேசுவது? எதைப்பற்றிப் பேசினாலும் அந்தப் பேச்சு ஓரளவில்தான் நிற்கும். ஆகவே நாள்தோறும் வெவ்வேறு பொருள்களைப் பற்றியும் பேசிக்கொண்டிருக்கிறோம். எதிலும் முடிவுகாணாமல் பேசிக்கொண்டே போகிறோம். வாழ்நாள் முழுவதும் இந்த அரைகுறைப் பேச்சில் சென்றுவிடுகிறது. எதனையும் முழுமையாகப் பேசுவதும் இல்லை. பலகாலம் பேசுவதற்குப் பொருளும் இல்லை. ஆனால் பக்தர்கள் தம்முடைய பேச்சை நல்ல பயன் உடையதாகச் செய்கிறார்கள். எந்தப் பேச்சைப் பேசினால் வாழ்

நாளில் நல்ல பயன் உண்டாகுமோ, யாருடைய பேச்சு முடிவு இல்லாமல் நீளுமோ அந்தப் பேச்சைப் பேசுகிறார்கள். அதுதான் இறைவன் புகழ். அவர்கள் பேசும் பொழுது இறைவனை அன்றி மற்றதைப் பற்றிப் பேசமாட்டார்கள். எத்தனை ஊக்கம் உண்டாகிறதோ அத்தனைக்கு அத்தனை எம்பெருமானுடைய புகழை விரித்துப் பேசுவார்கள். அப்படிப் பேசுவதனால் அவர்களுக்கு இன்பம் உண்டாகிறது. இந்த நிலையை ஞானசம்பந்தப்பெருமான் சொல்கிறார்.

சீர்காழிக்கு அருகில் கீழைத் திருக்காட்டுப்பள்ளி என்ற தலம் இருக்கிறது. அங்கே திருஞானசம்பந்தர் சென்று பதிகம் பாடியிருக்கிறார். அந்தத்திருப்பதிகத்தில் ஒரு திருப்பாட்டில் 'இறைவனைப் பேசுவது அன்றி வேறு பேச்சு இல்லை' என்று சொல்கிறார். அதை இனிப்பார்ப்போம்.

ஆண்டவனுடைய புகழைப் பெரியவர்கள் அறிவார்கள். மனிதர்களுடைய செயலைக் காட்டிலும் ஆண்டவனுடைய செயல் நம் கண்முன்னால் நிற்கிறது. மிகப்பெரிய செயலையுடைய மனிதனானாலும் பல சமயங்களில் சோர்வு எய்துகிறான். ஒருவனுடைய பெருமையை நாம் உணரும்போதே அவனது சிறுமையும் நம் கண்முன் தோன்றுகிறது. சிற்றறிவும், சிறு செயலும், உடைய மனிதர்களின் படைப்புக்கள் யாவுமே விரைவில் அழிந்து போகின்றன. நம் கண்முன்னே தோன்றுகின்ற பிரபஞ்சத்தில் இறைவனால் படைக்கப்பட்ட ஆயிரம் ஆயிரம் படைப்புக்கள் உள்ளன. அவற்றைப் பார்க்கும்போது எல்லாவற்றையும் அமைத்த இறைவனுடைய பேராற்றலை நினைத்து வியப்பு அடைகிறோம். நுட்பமான பொருளையும், திட்பமான பொருளையும், மிகச் சிறிய பொருளையும், மிகப் பெரிய பொருளையும் அவன் அமைத்திருக்கிறான். பேராற்றல் படைத்த பூதங்களை உண்டாக்கி அவற்றின் கூட்டமைப்பால் வெவ்வேறு பிரபஞ்சத்தைப் படைத்து நிலவவிட்டிருக்கின்றான். அவனுடைய அற்புதமான ஆற்றலைத் தெரிந்துகொள்ளுதற்குப் புத்தகங்களைப் படிக்க வேண்டும். புராணங்களை

ஆராய்ச்சி செய்யவேண்டும். கண்ணும், காதும் உடையவர்கள் அவன் பெருமையை எளிதில் கண்டுகொள்ளலாம் நாள்தோறும் நம் கண்முன்னே வானமும், நாம் நிற்கும் பூமியும், நாம் நுகரும் காற்றும், நாம் பார்க்கும் மரம், கொடிகளும், மனித இனமும், உயிர்க் கூட்டங்களும், இறைவனுடைய படைப்பின் அற்புத விநோதங்களைக் காட்டிக் கொண்டே இருக்கின்றன. அவற்றை எல்லாம் படைத்த பேரருளாளனைப் பற்றிப் பேசுவதற்கு எத்தனை காலம் இருந்தாலும் போதாது. உலகத்தில் உள்ள பெரியவர்கள் மிக அன்புடன் அவனுடைய புகழைப் பேசிப் பேசி இன்னும் முடிவு கண்டிலர். அவன் ஆற்றலுக்கு முடிவு இல்லை. அவன் படைப்புக்கும் முடிவு இல்லை. அதுபோல் அவன் புகழுக்கும் முடிவே இல்லை.

இவ்வாறு அற்புதப் படைப்புக்களை ஆக்கி, நமக்கு வாழ்வு தந்திருக்கும் இறைவனைப் பற்றி எண்ணுமல் வேறு யாரை எண்ணுவது? அழகிய காட்சிகள் முன்னுல் நிற்கும் போது அவற்றைக் காணுத அபாக்கியவான் கண்ணில்லாத குருடனைப் போன்றவன். உலகம் முழுவதும் இறைவனுடைய கைவண்ணத்தை நினைப்பூட்டிக் கொண்டிருக்க அவற்றைப் பற்றிச் சிந்திக்காமல் இறைவனை மறந்து நிற்பவன் ஒரு வகையில் குருடனே. அவன் அகக்கண் இல்லாதவன். அத்தகையவன் தன்னலத்தைப் பேணிப் பிறருக்குத் துன்பத்தை உண்டாக்குவான். அசுரர்கள் என்று புராணங்கள் சொல்லுகின்ற பிறவிகள் இத்தகையவர்களே. ஒருவன் படைத்த படைப்பைக் கண்டு மகிழ்வது நமக்குரிய கடமை, அதை அழிப்பதற்கு நமக்கு உரிமை இல்லை. அதனுல் படைத்தவனுக்குத் துன்பம் உண்டாகும். நமக்கு யாதொரு பயனும் இல்லை.

நல்லதைப் படைத்தவன் தேவனுக்குச் சமானமாகிறுன். அதனை அழிக்கிறவன் அசுரன். முன் காலத்தில் மூன்று அசுரர்கள் பறக்கும் மூன்று மதில்களை உடையவர்களாக உலகத்தை எல்லாம் கலக்கி வந்தார்கள். பொன், வெள்ளி,

இரும்பு, என்று மூன்று பறக்கும் கோட்டைகளை எங்கும் பறக்க விட்டுத் திடீரென எங்காவது இறங்கி அங்கேயுள்ள மக்களையும், மற்ற ஜீவராசிகளையும், அழித்து ஒழிப்பார்கள். இதனால் அவர்களுக்கு எந்தவகையான பயனும் இல்லா விட்டாலும் பிறர் அழிவதைக் கண்டு இன்பம் கொண்டார்கள். தனக்குத் துன்பம் வந்தாலும் பிறருக்கு நலம் செய்பவன் தேவ சாதியைச் சேர்ந்தவன். பிறருக்கு நலம் செய்து அதனால் தானும் ஓரளவு நன்மை அடைகிறவன் மனித சாதியைச் சேர்ந்தவன்' பிறருக்குத் துன்பம் செய்து அதனால் இன்பம் பெறுகிறவன் அசுர சாதியைச் சேர்ந்தவன். மேலே சொன்ன மூன்று கோட்டைகளையும் திரிபுரம் என்று சொல்வார்கள் அவற்றின் தலைவர்களாகிய மூன்று அசுரர்களும் எப்போதும் பறந்து கொண்டே இருந்தார்கள். அவர்கள் பறப்பது நின்று எங்கேனும் இறங்கினால் உலகத்தவர்களுக்குத் துன்பம் உண்டாகும். அவர்களால் அல்லலுற்ற உயிர்க் கூட்டங்கள் இறைவனை நோக்கி முறையிட்டன தேவர்கள் கதறினார்கள். அப்போது சிவபெருமான் முப்புரங்களையும் சிரித்து எரித்தான்.

ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களே முப்புரங்கள் என்பதும் ஞானம் என்னும் தீயினால் அவற்றை அழிப்பதற்கு இறைவன் அருள் செய்கிறான் என்பதும் திரிபுர சங்காரத்தின் உட்கோள், வெளிப்படையாகத் தம்முடைய படைப்பும், ஆற்றலும் யாவரும் அறியும்படி இருந்தாலும் அவற்றை அறியாமல் மும்மலங்களின் வாய்ப்பட்டுப் பிறருக்குத் துன்பம் தந்து தானும் துன்பத்தில் அழிகின்ற மனிதனுக்கு ஆண்டவன் ஞானம் அளித்து மும்மலங்களைப் போக்கித் தூய்மை செய்வான் என்பதை அந்தக் கதை காட்டுகிறது.

திரிபுர சங்காரத்தில் வியக்கத்தக்க செய்தி ஒன்றுண்டு. சிவபெருமான் முப்புரங்களை மாத்திரம் அழித்தானேயன்றி அவற்றின் தலைவர்களாகிய அசுரர்களை அழிக்கவில்லை. அவர்களில் இருவரை வாயில் காவலராகவும், ஒருவனை

முரசை முழக்குபவனுகவும் ஏற்றுக் கொண்டான். முப்புரத்தின் மலத்தினுல் அவர்கள் உலகத்திற்குத் தீமை செய்து கொண்டிருந்தார்கள். அவை அழிந்தவுடன் இறைவனுக்கு தொண்டு செய்ய முற்பட்டார்கள். மலத்தின் தொடர்பினுல் ஆன்மா இறைவனை மறந்து துன்பத்தில் ஆழ்கிறது. அந்த மலங்கள் எரியுண்டால் இறைவனேடு ஒன்றி இன்பத்தைப் பெறும். இந்தக் கருத்தைத் திரிபுர சங்காரக் கதை காட்டுகின்றது.

தீமை செய்தவர்களைத் தண்டித்து அவர்கள் தீமைக்குக் காரணமாக இருக்கிற வல்லமையைக் குறைத்து ஆட்கொள்வது இறைவனுடைய கருணை வகைகளில் ஒன்று. அதை மறக் கருணை என்று சொல்வார்கள். கையில் கத்தி எடுத்துப் பக்கத்தில் உள்ள குழந்தைகளைக் காயப்படுத்தும் குழந்தையின் கையினின்றும் அந்தக் கத்தியை வாங்கி அதனுடைய பொல்லாத்தனத்தை மாற்றுகின்ற தாயைப் போல, இறைவன் புரத்தை எரித்து, அவற்றின் தலைவர்களை ஆட்கொண்டான். இது பொல்லாதவர்களைச் சிவபெருமான் ஆட்கொள்ளும் நெறி.

நல்லவர்கள் ஆண்டவனுடைய பெருமையை நன்கு உணர்ந்து அவனைத் தொழுது ஏத்துகிருர்கள். மக்கள் கண்ணுக்கும், காதுக்கும், பிற பொறிகளுக்கும் இனிய இடங்களை நாடுகிருர்கள். அடியார்களோ எம்பெருமான் எழுந்தருளி யிருக்கும் திருத்தலங்களை நாடிச் சென்று அவனுடைய புகழைக்கேட்டு உருகுகிருர்கள். சிவபெருமானுடைய திருவிளையாடல்கள் மா புராணங்களில் பேசப்படுகின்றன. அவற்றை அன்றி அங்கங்கே உள்ள தலங்களில் வெவ்வேறு வகையான வரலாறுகளைக் கேட்கலாம். சிவபெருமான் ஆங்காங்கு இருந்து அடியார்களுக்கு அருள் செய்த கதைகளும், பராக்கிரமத்தைக் காட்டிய கதைகளும் தலபுராணங்களாக வழங்குகின்றன. இறைவனைத் தொழுவதற்குச் செல்கின்ற அன்பர்கள் அவற்றை எல்லாம் கேட்டு அவனைப் புகழ்கிருர்கள். கல்வி கற்று கேள்வியினுல் சிறந்தவர்களாக நிற்கின்ற அந்த அடியார்கள் மேலும் மேலும் சிவபெருமானுடைய புகழைக் கற்று ஓதுகிருர்கள். அங்கங்கே இறை

வனைப் பற்றிக் கூறும் வரலாறுகளைக் கேட்கும் போது மகிழும் அவர்கள் மேலும் மேலும் கேட்க விரும்பு கிறார்கள். இது நடந்ததா, இது அறிவுக்கு உட்பட்டதா என்ற ஆராய்ச்சி செய்வதில்லை. அவர்களுடைய ஆராய்ச்சி முதலிலேயே முடிந்து விட்டது. இந்தப் பிறவி பெற்றதன் பயன் இறைவனை வழிபட்டு, தியானித்து நலம் பெற வேண்டுமென்ற லட்சியத்தை அவர்கள் ஆராய்ந்து கண்டு கொண்டார்கள். அதற்கு மேல் அவர்கள் இறைவனுடைய வழிபாட்டில் ஈடுபட்டார்கள். தொடக்கத்திலேயே ஆராய்ந்து முடிவு கண்டவர் களாதலின் மீட்டும் மீட்டும் ஆராய்ச்சி செய்ய வேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை. எனவே, தம்முடைய காது பயன்பெறவும், வாக்குப் பயன்பெறவும் இறைவனுடைய புகழைக் கேட்டுத் தாமும் சொல்லி நிற்கிறார்கள். வாழும் நாள் நல்வழியில் கழிய வேண்டும், ஆதலின் தலங்களுக்குச் சென்றும் இறைவனுடைய புகழைக் கேட்டும் இறைவனை ஏத்தியும் பொழுதை நல்வழியில் போக்குகிறார்கள். மேலும் மேலும் அவன் எழுந்தருளியிருக்கும் திருத்தலங்களைத் தரிசிக்க விரும்புகிறார்கள். பேரார்வத்துடன் சென்று வழிபடுகிறார்கள். இத்தகையவர்களைத் திருஞானசம்பந்தர் இனம் கண்டு கொண்டிருக்கிறார். கீழைத் திருக்காட்டுப்பள்ளியில் அவருடைய கண்முன் இப்படியுள்ள சில அன்பர்கள் தோற்றுகிறார்கள். சம்பந்தப்பெருமான் தம்முடைய திருப்பாட்டில் அதைச்சொல்கிறார்.

இறைவன் திரிபுராதிகளை மறக்கருணை காட்டி ஆட்கொண்டவன், இப்போது கற்றவர்கள் தொழுது மேலும் மேலும் காதலிக்கப்படும் நிலையில் காட்டுப் பள்ளியுள் எழுந்தருளியிருக்கின்றானும்.

**செற்றவர் தம்அரணம்அவற்றைச் செவ்வழல் வாய்எரி
ஊட்டி நின்றுங்
கற்றவர் தாம்தொழு தேத்த நின்றான், காதலிக்
கப்படும் காட்டுப்பள்ளி.**

இன்னும் உயர்ந்த பக்குவம் உடைய பெருமக்களைப் பற்றியும் சம்பந்தர் சொல்கிறார். கற்றவர்கள் தொழுது ஏத்த நிற்கும் நிலையை யாரும் எளிதில் உணர்ந்து கொள்ள லாம். தாம் பெற்ற கல்வியின் சிறப்பினால் இறைவனை அவர்கள் பலபடியாகப் பாடுகிறார்கள். ஆனால் அதற்கும் மேற்படியில் இருந்து ஆண்டவனை நெருங்கி, அவனைத் தம் உள்ளத்தில் தியானித்து, அவனைத் தம்மவனாகவே பெற்று ஒன்றுபட்ட உள்ளம் உடையவர்கள் அங்கே இருக்கிறார் களாம். அவர்கள் மெய்யுணர்வாகிய ஞானத்தைப் பெற்ற வர்கள். மௌனமே அவர்களுடைய பேச்சு. தியானமே அவர் களுடைய வழிபாடு. அவர்களை எளிதில் இனம் கண்டு கொள்ள முடியாது ஆனால் தேவர்களில் சில நல்லவர் கள் அவர்களுடைய பெருமையை உணர்ந்து கொள்கிறார் கள். சூட்சும திருஷ்டியை உடையவர்கள் ஆதலின் அந்த நல்ல உம்பர்கள் இந்த ஞானிகளைத் தொழுது ஏத்துகிறார் கள். கற்றவர்கள் இறைவனைத் தொழுது ஏத்தி நிற்க, நல்ல உம்பர்கள் ஞானிகளைத் தொழுது ஏத்தி நிற்கிறார் கள். முன்னைக் காட்சியை யாரும் காணலாம். பின்னைக் காட்சியை அருள் உடையவர்களே காணலாம். ஞானசம் பந்தப்பெருமான் இந்த இரண்டு காட்சிகளையும் கண்டு கூறுகிறார்.

கற்றவர் தாம்தொழு தேத்தநின்றான் காதலிக் கப்படும்
காட்டுப்பள்ளி
உற்றவர் தாம்உணர் வெய்திநல்ல உம்பருள் ளார் தொழு
தேத்த.

இப்படிப் புறக் காட்சியும், அகக் காட்சியும் தோன்ற எம்பெருமான் திருக்காட்டுப் பள்ளியுள் எழுந்தருளியிருக் கிறான். அவன் அறத்தையே விடையாகக் கொண்டு அமர்ந் திருக்கிறான். உலகத்தை எல்லாம் பாதுகாப்பது அறம். அதனைப் பாதுகாப்பவன் சிவபெருமான். தன்னைத் தாங் கும் சிவபெருமானை, தானே விடை உருவாக நின்று அறக் கடவுள் தாங்குகிறது. இறைவன் அறம் என்னும் விடை யின்மேல் அமர்ந்திருக்கிறான்.

மறக் கருணையினல் திரிபுரத்தை எரியூட்டியவன், பலரும் காணக் கற்றவர்கள் தொழுது ஏத்த நிற்கின்றவன் நுட்பமான உண்மையை உணர்ந்த மெய்ஞ்ஞானியர்களைத் தேவர்கள் போற்ற அவர்களுக்கு அருள் செய்து நிற்கின்றவன், அறமாகிய விடையின் மேல் அமர்ந்திருக்கும் பெருமான் என்று சிவபெருமானைத் துதிசெய்த சம்பந்தப்பெருமான், 'இப்படி சிவமெருமானைப் பேசுவது அல்லாமல் வேறு பேச்சு எங்களுக்கு இல்லை' என்று சொல்கிருர்.

இறைவனுடைய புகழைப் பேசுவதில் ஆசை உடையவர்களுக்கு வாழ்நாள் போதாது. இறைவனைப் புகழ்வதற்கு இன்னும் பல வாய்கள் இலலையே, அவனைக் காண்பதற்குப் பல கண்கள் இல்லையே என்று அடியார்கள் எண்ணுவார்கள். நாள் முழுவதும் பேசினலும் அவனுடைய புகழைச் சொல்லி வரையறை காணமுடியாது. ஆதலால் மற்றவற்றைப் பேசுவதற்கு நேரம் ஏது? எதைப் பேசினலும் சுற்றிச் சுற்றி இறைவனுடைய புகழாகவே முடியும். உலகியற் பொருள்களையும், நிகழ்ச்சிகளையும் பற்றிப் பேசவேண்டிய அவசியம் நேர்ந்தால் மீண்டும் மீண்டும் அந்தப் பேச்சு யாவும் இறைவன் புகழில் வந்து நிற்கும். இது அடியார்களுடைய இயல்பு. இந்தக் கருத்துக்களை எல்லாம் வைத்துச் சம்பந்தப் பெருமானுடைய திருப்பாட்டு எழுகிறது.

செற்றவர் தம்அர ணம்அவற்றைச் செவ்வழல் வாயெரி
யூட்டி நின்றும்
கற்றவர் தாந்தொழு தேத்தநின்றன் காதலிக் கப்படும்
காட்டுப்பள்ளி
உற்றவர் தாம் உணர் வெய்திநல்ல உம்பருள் ளார்தொழு
தேத்தநின்ற
பெற்றம ரும்பெறு மானையல்லால் பேசுவது மற்றோர்
பேச்சிலோமே,

ஆருயிர்க்கூட்டங்களை அழித்தவர்களாகிய அசுரர்களுடைய கோட்டைகள் மூன்றைச் சிவந்த தீயில் எரித்து

நின்று, நல்ல கல்வியைக் கற்றவர்கள் தன்னைத் தொழுது ஏத்த நிலையாக நின்றவனும், பலரும் விரும்பும் கீழைத் திருக்காட்டுப்பள்ளி என்னும் தலத்தில் நெருங்கிவந்த அடியார்கள் ஞானத்தை அடைந்து நல்ல தேவர்கள் தொழுது ஏத்தும்படி நிற்பதற்குக் காரணமான விடையில் எழுந்தருளி யிருக்கும் பெருமானுமாகிய சிவனைப்பற்றிப் பேசுவதையில்லாமல் பேசுவதாகிய வேறு ஒரு பேச்சு இல்லோம் நாம்.

ஏத்த நின்றான் காதலிக்கப்படும் என்றும் கூட்டிப் பொருள் கொள்ளலாம்.

(செற்றவர் — பகைத்தவர்; பெற்று — பெற்றம்; விடை)
இது முதல் திருமுறையில் வருவது.

---

எழுந்திரு, விழித்திரு, கடவுள் அண்மையில்
உள்ளார்.
அன்ப! கருத்துச் செலுத்தி உற்றுக் கேட்குக.
சேவி, நேசி, தியானி, அனுபூதியடை.
உன்னுள்ளேயே அருள் மீட்புத் திறவுகோல்
உளது.

இவ்வுலகக் கவலைகள் தொல்லைகளுக் கப்பால்,
காம காஞ்சனத்தின் வஞ்சக் கவர்ச்சிக் கப்பால்,
உன் இருதய குகையைத் திறந்து
'அதுவே நீ' யென்று அனுபூதியடைக.

—சிவானந்தர்

---

# எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே!

பண்டிதை: செல்வி. தம்பையா

இருள் தூங்குமிரவு பலகழிந்தும் கழியாதுமாகிய புலரிக் காலம், மார்கழித்திங்கள். ஆதித்தன் தன் அயனத்தை வடக்கு நோக்கிச் செலுத்தச் சித்தமாகின்றான், ஆதித்தோதயங் கண்ட இன்பக் களிப்பால் மாவும் புள்ளு மிருக்கை விட்டெழுந்து தம் ஆரவாரத்தைத் தெரிவியா நின்றன. எப்போ விடிவுகால மென்றேங்கியிருந்த மக்கள் தாமும் வாழா விருப்பார்களா. நீராடிநிர்மலராய் இறைவனுவப்பன செய்வராயினர். பிணை மலர்க் கையினராய், இன்னிசை வீணையர் யாழினராய், இருக்கொடு தோத்திரமியம் பினராய், உச்சி கூப்பிய கையினராய், பாடலாடல் புரிபவராய், எம்பெருமான் கோயில் புக்குத் தம்வரவை உணர்த்தா நின்றனர். திருப்பெருந்துறையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிகள் மணிவாசக சுவாமிகளுக்கோ கருத்திற்கினிய காட்சியாக அமைந்தது. அமைதலும் இந்நிகழ்ச்சிகளைத் தமது கருத்திற்கு ஆதாரமாசக் கொண்டு, திருப்பெருந்துறை பெருமானைத் துயிலெழுப்புவதாகக் குறித்துப் பத்துப் பாடல்களை அருளிச் செய்தனர். இத்திருப்பாடல்கள் பத்தும் ''திருப்பள்ளி எழுச்சி'' என்று சொல்லப்படும், திருத் தெய்வத்தைக் குறிக்கும். எனவே இது தெய்வத்தை எழுந்தருளச் செய்தல் என்று பொருள்படும். எம்பெருமானே! ஆரமுதே! அலைகடலே! என அப்பெருமானை விளித்து, ஒவ்வொரு பாடலிறுதியிலும், ''பள்ளி எழுந்தருளாயே'' எனக் கூவுகின்றார். எமது தலைவனே!, அமுதம் போன்றவனே!, அலைபோற் றோன்றி அடங்குதற்குரியவனே!

நினது திருப் படுக்கையினின்றும் எழுந்தருள்க என்ருர். குறிப்பாக நினது அருளைத் தந்தருள்க என்றற்கு.

எப்பொருளினும் மெய்ப்பொருளை எழுந்தருளச் செய் பவர்கள் மெய்ஞ்ஞானிகள். அதாவது எப் பொ ரு ளி னு ம் மெய்ப்பொருளைக் காண்பவர்கள். அவர் தம் நோக்கு அருள் நோக்கு. இவ்வாற்ருன் ஞானக்கண்ணிற் சிந்தை நாடிப் பார்க்கும் அவர்தம் காட்சிக்கும், ஊ ன க் கண்கொண்டு பார்க்கும் ஏனையோர்தம் காட்சிக்கும் பேதம் அதிகம். இருசாரரார் காட்சியும் இருவேறு துருவங்களே. எமக்குச் சாதாரணமாகத் தோன்றுமொரு கா ட் சி அவர்கட்குப் பெரியதொரு உண்மையைப் புலப்படுத்தா நிற்கும். இங்ஙனமே அருணோதயக் காட்சியைக் கண்டு வியந்த மணிவாசகர்,

''அருணனிந்திரன் திசை அணுகின னிருள்போய்
அகன்றது வுதய நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரிய னெழவெழ நயனக்
கடிமலர் மலர''

எனப்பேரருளின் திறத்தைப் பேசிவிடுகின்ருர். உதய காலத்தில் அருட்கதிரவன் நின் திருமுகத்து விளங்கித் தோன்றத் தோன்ற அன்பர்களது கண்களாகிய மலர்கள் மலர்ந்தன என்கிருர். இறைவனின் ஒளியாகிய இன்னருட் சக்தியையே இங்கு கருணையின் சூரியன் எனக்குறிப்பிட்டார். புறவிருள் நீங்கக் கதிரவன் விரிதல் போன்று அக விருள் நீங்கத் திருமுகத்தே அருள் விளங்கித் தோன்று மாறு விளக்கினர்.

இறைப் பொருள் தனது திருவருளாகிய சத்தி மேலிட்டே இப்பிரபஞ்சத்தை நடாத்துகிறது. இச்சக்தியின் அருளால் நாம் சகலமும் பெற்று இப்பிரபஞ்ச வாழ்வை வாழ்கின்ருேம். எமக்கு வேண்டிய உடல், உண்டி, முத லியவற்றை மாயையிலிருந்து படைத்துக் கொடுத்து, எமது வினைப்பயனைத் துய்ப்பித்து, மலங்கழுவி வீடுபே

றுய்ப்பது மாகிய தொழில்களைச் செய்வது இவ்வருட் சக்தியே. இங்ஙனம் மலத்தினின்றும் பிரிக்கும் சக்தியைத் திரோதானம் என்றும், வீடுய்ப்பிக்கும் சக்தியை அருள் என்றும் கூறும். திரோதான சுத்தியடைந்த அடிகள் அருளம்மையின் அருள் வேட்பாராகி அவ்வருளை விதந்து அலர்ந்த மெய்க்கருணையும்'' என உம்மை கொடுத்து அப்பால் நீயும் எனக்கூவி, அவனியிற் புகுந்தெமை ஆட்கொள வேண்டுமென்று அழைக்கின்றார். இங்கே அருட்சக்தியையே ''அலர்ந்த மெய்க்கருணை'' யெனக் குறிப்பிட்டார். இதிலிருந்து, திரோதான சுத்தியடைந்த ஆன்மா அருட் சக்தியின்றி இறைவனை யடைய முடியாது என்னும் உண்மையைப் புலப்படுத்தினர்.

இனித் திரோதான சுத்தியடைந்து அருட்சக்தி வழி நின்று இறையின்பம் நுகரும் ஆன்மாவின் நிலை கூறுவாராகி,

நின்னடியார் பந்தனை வந்துறுத்தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத்தியல்பின்
வணங்குகின் றாரணங் கின் மணவாளா''

என்னு மடிகளால் குறிப்பிடுகின்றார். மானுடத்தியல்பின் தலைவியர் அன்பு நீர் பெருகத் தொழுது இன்புறுமாறு, பாச நீக்கமுற்ற ஆன்மா இறையின்பத்தை நுகர்ந்து மாறிலா மகிழ்ச்சியில் மலருமாறு கூறப்பட்டது. இவற்றை எல்லாம் நன்கு உணர்ந்த அடிகள் இறைவனைத் துயிலெழுப்பு வான் புக்குப் பலவிடத்தும் சக்தியின் திறமே பேசினர். அன்றியும் எம்மையெல்லாம் இறை நெறிக்காற்றுப் படுத்து வாராகி ''இந்தப்பூமி சிவனுய்யக் கொள்கின்றவாறு'' அல்லவோ இத்தகைய வீடுபேற்றிற் கேதுவான இவ்வுலகிடைப், பெறுதற்கரிய மானுடப் பிறவியைப் பெற்றும், பிறந்ததனுலாம் பயனை அடைய முயற்சியாது வாழ்நாளை வீணுக்கு கின்றோமே என இரங்கி அறிவு நல்கு கின்றார்.

சூரியனிடமிருந்து ஒளிக்கதிர்கள் தோன்றுவது போல் சிவத்திடமிருந்து ஒளியாகிய சக்தி தோன்றுகிறது. இதனை யே நாம் திருவருள் என்றும், உமை, பார்வதி என்றும், கூறுகின்றோம். சிவத்திடமிருந்து தோன்றுகின்ற இந்த ஒளி யின் சத்தி யெல்லாந்திரண்ட தொகுதியே சூரியன், இத னாலேயே நாம் சூரியனுக்கு வழிபாடு ஆற்றுகிறோம். பேரி ருள் சூழிரவின் கன் உறங்கிக்கிடந்த உயிர்கள் ஞாயிற்று மண்டிலந் தோன்றியவுடன் விழிப்புற்றுத் தத்தம் வினை யிடைச் சென்று மகிழ்தல் போல, ஆணவ இருளிற்பட்டு மயங்கிய உயிர்களை அவ்விறைப் பொருள் சகலாவத்தை யிலேற்றி விழிப்பூட்டியவுடன் தம்மியல்பாகிய இன்ப வுணர்வு தோன்ற அருளைநாடி அழிவிலா வீட்டின் கண் மகிழும். இவ்வுண்மையைத் தத்து வார்த்தமாக உணர்ந் தோர் சூரியனைத் தெய்வமாக வழிபடுகின்றனர்.

இக்கருத்துப் பற்றியே இருட்காலமாகிய தெற்சணு யின காலத்தில் நவராத்திரி, திருவெம்பாவை முதலிய சக்தி வழிபாடுகள் அமைந்துள்ளன. அதிலும், எமக்குத் தெற்சணுயினகாலம் முடிவுற்று உத்தராயணகாலம் தொ டங்குதற் கிடனுய காலமாக அமைவதாலும், தேவர் கட்கு இருள்புலருங் காலமாக இருப்பதாலும், மார்கழித் திங்களே இவ்வழிபாட்டிற்கு உகந்ததாக இருக்கின்றது. எனவே பாவை வழிபாடு சைவர்களினுலும், வைணவர் களினுலும் கொண்டாடப் பட்டு வருகின்றது. சைவர்கள் பெரும்பாலும் இத்திருவெம்பாவைக் காலத்தில் திருப் பள்ளி எழுச்சி பாடுவதன் கருத்தும் இதுவே. அதாவது வீடுய்ப்பிக்குந் தாயாகிய அருளம்மையை எம்மனத்திடை எழுந்தருளச் செய்வதே. இதோ உத்தராயணகாலம் தோன்றுகிறது. நாமும் எம்பெருமானைப் பள்ளி எழுப்பு வோமாக. எமது வேண்டுகோட் கிசைந்து எம்பெருமானும் எம்மையெல்லாம் ஆட்கொள்ளப் பள்ளி எழுந்தருள்வாளுக.

# இமாலயன்

# பற்பொடி

★★

பற்களுக்கு வெண்மை தந்து
பல் வியாதிகளைக் குணப்படுத்துகிறது.

## இமாலயன் பற்பொடி

பல் வலி, பல் அரணை பல்லில் இரத்தம்
வடிதல்

போன்ற வியாதிகளைக் குணப்படுத்துகிறது.

ரின் ஒன்று 1 ரூபா. தபாற்செலவு 50 சதம்.

கிடைக்குமிடம்:

**ஆத்மஜோதி நிலையம்**

**நாவலப்பிட்டி**

Registered at the G.P.O. as a Newspaper M. L. 59/300

# சந்தா நேயர்களுக்கு!

அன்புடையீர்!

இறைவன் திருவருளால் ஆத்மஜோதிக்கு 19 ஆண்டுகள் பூர்த்தியாகி 20வது ஆண்டு ஆரம்பமாகி 5வது இதழும் வெளிவந்துள்ளது. பல சந்தா நேயர்களுடைய ஆதரவினுலேயே ஜோதி மாதந்தோறும் சுடர்விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. வழக்கம்போல் அன்பர்கள் அனைவரும் இவ்வாண்டுச் சந்தாவை அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். சந்தா நேயர்கள் தமது சந்தா இலக்கங்களைக் குறிப்பிடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இந்தியாவில் உள்ளவர்கள் தங்கள் சந்தாவை
வழக்கம்போல்

**R. வீரசம்பு, சம்பு இன்டஸ்ரீஸ்,**

அரிசிப்பாளையம். சேலம்—9.

என்ற விலாசத்திற்கு அனுப்பி வைத்து இவ்விடமும் அறியத்தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

## ஆத்மஜோதி நிலையம்,

**நாவலப்பிட்டி, (இலங்கை)**

அச்சிடுவிப்போர்: ஆத்மஜோதி நிலையத்தினர்

அச்சிடுவோர்: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்

வெளியிட்ட திகதி: 15—3—68.